முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்திலே ஏற்கெனவே ஒரு அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. அரசினுடைய கொள்கைப்படி ஒரு தாலுக்காவுக்கு ஒரு தலைமை மருத்துவமனை. எனவே, அந்த அடிப்படையிலே பார்க்கிற பொழுது, இந்த தாலுக்காவிற்கு ஒரு மருத்துவமனை ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே மக்கள் தொகை 88 ஆயிரம் பேர் அந்த ஒன்றியத்திலே இருக்கிறார்கள். அதற்காக ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி கொண்டிருக்கிறது. எனவேதான், நான் மருத்துவ மனையாக அதை உயர்த்த முடியாது என்று தெரிவித்தேன். அரசினுடைய கொள்கைப்படி, திட்டப்படி ஒரு தாலுக்காவுக்கு ஒரு மருத்துவ மனை என்பதை மட்டும் இப்போது நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். எனவே இதைச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா என் 145, திருமதி பி. நிர்மலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

145—

கிராமங்களுக்குச் சிறிய பேருந்துகள் இயக்குதல்

35616—*திருமதி பி. நிர்மலா:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலிருந்தும் அதனைச் சுற்றியுள்ள சிறு சிறு கிராமங்களுக்கு சிறிய பேருந்துகள் (Mini Buses) இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலிருந்தும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு தேவைக்கேற்ப பேருந்துகள் இயங்கி வருவதால் சிறிய பேருந்துகள் (Mini Buses) இயக்கும் திட்டம் ஏதுமில்லை.

திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். ஒவ்வொரு ஏழைக் குடிமகனும் பயன் பெற வேண்டுமென்ற முறையிலே,

1995 மார்ச் 29]

தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை அமல்படுத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்களின் நல்லாட்சியில் அனைத்துத் துறைகளும் சிறந்து விளங்குவதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் போக்குவரத்துத் துறையும் சிறந்து விளங்குகின்ற இந்தக் கால கட்டத்தில் இந்தத் திட்டம் மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கிராமங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேட்டார்கள். அதிலே சிறிய பேருந்துகள் தலைநகரிலிருந்து இயக்கப்படுமா என்று கேட்கிறார்கள். பெரிய பேருந்துகளையும், சிறிய பேருந்துகளையும் இயக்குகிறபோது ஒரே செலவுதான் ஆகிறது. சிறிய பேருந்துகளில் டயர் மட்டும்தான் குறைவு. இதிலே 4 டயர்கள், அதிலே 6 டயர்கள் இருக்கின்றன. இதுதான் வித்தியாசம். மேலும் ஒரே அளவுக்குச் செலவாகிற காரணத்தால்தான் சிறிய பேருந்துகளை அங்கே இயக்குகின்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் நகரங்களைச் சுற்றியுள்ள சிறிய கிராமங்களுக்குச் செல்லும் பேருந்துகளில், கிராம மக்களின் ஜனத்தொகை குறைவாக உள்ள காரணத்தால் சுமார் 10, 15, பேர்கள் தான் பயணம் செய்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் சிலசமயங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டுவிடுகின்றன. இதனால் ஏழை எளிய மக்களும், கர்ப்பிணிப் பெண்களும், உடல்நலம் இல்லாதவர்களும் 2 அல்லது 3 கிலோ மீட்டர்கள் நடந்து வந்து, பேருந்துகளைப் பிடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. முடியாது, நடக்காது என்ற சொல்லுக்கு இடமில்லை என்ற வகையிலே, சங்ககாலம் தொட்டு வழங்கி வந்த 3 தமிழ் என்பதையே இன்று 4 தமிழ் என்று மாற்றிக் காட்டிய மாண்புமிகு இதய தெய்வம் அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறைந்த ஜனத் தொகை இருக்கின்ற இடங்களுக்கு, டயர் செலவு தவிர மற்றதெல்லாம் ஒன்றுதான் என்று கூறியவர்கள், குறைந்த இருக்கைகள் உள்ள மினி–பஸ்ஸை அமைத்துக் கொடுத்தால், ஏழை எளிய மக்களின் துயரம் தீர்க்கப்படும் என்று மறுபடியும் விண்ணப்பித்து, மறுபடியும் மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 29

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டேன். சிறிய பேருந்துகளை இயக்குகிறபோது, அதிலே இருக்கைகள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றன. அதிலே வருமானமும் குறைவாக இருக்கிறது. இருந்தாலும்கூட சில பேருந்துகளை நாம் இயக்கினோம். இல்லை என்று சொல்லவில்லை. சில பகுதிகளிலே ஓரிரு சிறிய பேருந்துகளை நாம் இயக்கிப் பார்த்ததற்குப் பிறகு அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தால்தான், அதை இயக்குவது சாலப்பொருத்தமாக இராது என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பஸ்களிலே ஏற்படுகின்ற நெருக்கடியைக் குறைக்க பல இடங்களிலே மினி பஸ்களை விட்டிருக்கிறார்கள். பஸ்கள் உள்ளே செல்ல முடியாத குறுகிய சாலைகளிலே கூட Gas-ஐப் பயன்படுத்தி சிறிய பேருந்துகளை விட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். மேலும் அப்படி அதிகப்படுத்தி விடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய பேருந்துகளை தலைநகரங்களில் சில பகுதிகளில் இயக்கினோம். அதிலே இருக்கிற சிக்கல் என்ன என்று சொன்னால், சிறிய பேருந்துகளில் ஏறத்தாழ 15 அல்லது 20 பேர்களுக்கு மேலே அமர முடியாது. அதனுடைய கட்டமைப்பு-கூண்டுகூட நின்று கொண்டு பயணம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. பெரிய பேருந்துகளில் இன்றைக்கு நூற்றுக்கணக்கானவர்கள் வருகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், மக்களுடைய தேவைகளைக் கருத்திலே கொண்டுதான், இட நெருக்கடியின் காரணமாக, சாலையில் இருக்கிற பல்வேறு சிக்கல்கள் காரணமாக, பெரிய பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு மீண்டும் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே, குறிப்பாக மலைப் பகுதிகளில் வளைவுப் பாதையாக இருப்பதால் பேருந்துகள் செல்வதற்கு முடியவில்லை. என்னுடைய

1995 மார்ச் 29]

தொகுதியிலேகூட தாமரைக்கரை-செங்குளம் வரை உள்ள சாலையிலே போக்குவரத்து வசதி கிடையாது. அப்படிப்பட்ட பகுதிக்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியோடு மாண்புமிகு வனத் துறை அமைச்சரவர்கள் இப்போது சாலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். *1947*, ஆகஸ்டு *15*-ல் சுதந்திரம் பெற்றோம் என்றாலும், இதுகாறும் பேருந்து வசதியை அந்தப் பகுதி மக்கள் பெற முடியாத சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு . . . .

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி பொதுவானது. ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தால்—அது அமைச்சருக்குத் தெரியும் என்றாலும்—அந்தக் காரணத்தாலேயே அவ்வாறு கேட்டுக்கொண்டே இருக்கக்கூடாது. பொதுவான கேள்வியாக இருக்க வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பகுதிகளுக்குப் பேருந்து வசதி இல்லாத, பல நூறு ஆண்டுக்காலமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற மக்களுக்கு, பேருந்துகள் போகாத இடமே இல்லை என்று சொல்லக்கூடிய முறையில் நம்முடைய புனிதத் தலைவி ஆட்சியில், எங்கள் அம்மாவினுடைய ஆட்சியில், பேருந்துகள் எல்லா இடங்களுக்கும் போகிற வகையில், பேருந்து வசதியில்லாத நான் சொன்ன சில இடங்களுக்கு மினி பேருந்துகளை விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை உங்கள் மூலம் பணிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்பப் பணிவு வேண்டாம். *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றிலேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆளுகிற இந்த மாநிலத்திலேதான், *2,000* மக்கள் தொகைக்கு ஒரு பேருந்து என்ற அடிப்படையில் பேருந்துகளை நாம் இயக்குகிறோம். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்த அளவுக்குத் தேவையான பேருந்துகளை

இயக்குகிறார்களா என்றால், இல்லை. குறைந்த கட்டணத்தில், சிறப்பான முறையில், பேருந்துகளை இயக்குகின்ற மாநிலமாகத் தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, சிறிய பேருந்துகள் அந்தப் பகுதிகளுக்கு இயக்கப்படுமா என்று கேட்டார்கள். பெரிய பேருந்துகளை இயக்கி அதற்கு வருகின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு இந்தப் பேருந்துக் கழகத்தை இயக்குவதே கடுமையான சூழ்நிலையாக இருக்கின்ற காரணத்தாலே, சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள், சிறிய பேருந்துகள் விடுவதாலே, டயர் தவிர வேறு லாபம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். எங்களுக்கு சிறிய பேருந்து இல்லாவிட்டாலும் கூட, பெரிய பேருந்துகளை, குறிப்பாக கிராமப் பகுதிகளில் சில இடங்களிலே, சொல்லப்போனால் எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தினுடைய வேலூர், ஆம்பூர், ஆற்காடு போன்ற பகுதிகள் சிறு சிறு குறுகிய தெருக்களாக இருக்கின்ற காரணத்தால், அது நகரமாக இருந்தாலும், நகரப் பேருந்துகள் என்று அழைக்கப்பட்டாலும் கூட, நகர பஸ்களே இல்லாமல், எல்லோரும் ரிக்ஷா, ஆட்டோவில் போனால் 10 ரூபாய் 15 ரூபாய் என்று கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே பெரிய பேருந்துகளை விட்டு, திருப்பமுடியாது என்ற காரணங்களை டிரைவர்களோ கண்டக்டர்களோ சொல்லாமல் பெரிய பஸ்களை இயக்குவதற்கு, நகரப் பகுதிகளில் பொதுவாக வேலூர், ஆம்பூர், ஆற்காடு போன்ற நகரங்களில், அமைச்சர் அவர்கள் பெரிய பேருந்துகளை நகருக்குள் ஓட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எந்தெந்தப் பகுதிகளில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறதோ, அந்தப் பகுதிக்கேற்ப, எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் அகலமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளிலே பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில பகுதிகள் பற்றி கருத்தைச் சொன்னார்கள். அதை அரசு கவனத்தில் கொள்ளும்.

1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ்களை மலை மேல் இருக்கும் கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்கு, சிறப்புத் திட்டமாக ஒதுக்கீடு செய்து, அங்கே பேருந்துகளை விட நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய பேருந்துகளை மலைப் பகுதிகளுக்கு இயக்குகின்றபோது, இன்றைக்கு இருக்கிற பேருந்துப் பயணக் கட்டணங்களைப் பார்க்கிறபோது, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகத்தான் இங்கே இருக்கிறது. மலைப் பகுதிகளுக்கு என்று தனியாகக் கட்டணங்களை உயர்த்தமுடியாது. அதே நேரத்தில் பெரிய பேருந்துகளை இயக்குகிறபோதும், அதற்கு ஆகின்ற செலவும் சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு ஆகின்ற செலவும் ஒரே செலவாகத்தான் ஆகும். ஆகவே அதைக் கருத்திலே கொண்டுதான், பெரிய பேருந்துகளை இயக்குகிறபோது, எண்ணிக்கையின் அடிப்படையில் பயணிகள் அதிகமாகப் பயணம் செய்கிறார்கள். அந்த அடிப்டையிலே பெரிய பேருந்துகளை மட்டும்தான் இப்போது இருக்கிற நிதி நிலை அடிப்படையில இயக்கமுடியுமே தவிர, சிறிய பேருந்துகளை இயக்குகிற நிலை இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 146, திரு. சஞ்சய் ராமசாமி, இருக்கையில் இல்லை. திரு.கே. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

146—

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்

35630—திரு. சஞ்சய் ராமசாமி:***

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து "காமராஜர் பெயரில் போக்குவரத்துக் கழகம்" ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும்?